47

தமிழ்நாட்டில் சாஸ்திரி

47/1-50

இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரஸ் பொதுக்
காரியதரிசி ஸ்ரீ ஹரிஹரநாத் சாஸ்திரி அவர்கள்
23-9-49 முதல் 3-10-49 வரை
தமிழ்நாட்டில் சுற்றுப்பிரயாணத்தின்போது செய்த
சொற்பொழிவுகளின் சாரம்



வெளியீடு:

ம் தொழிலும்

சங்கம் ரோடு, மதுரை.

V2,4Y7N03
N58
183259

தமிழ்நாட்டில் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் பொதுக்காரியதரிசி ஸ்ரீ ஹரிஹரநாத் சாஸ்திரி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - JAN 1958
MADRAS

தமிழ் நாட்டுக்கு நான்வருவது இதுதான் முதல் தடவை. தமிழ் நாட்டுத் தொழிலாளர்களைக் காணவும் தொழிற் சங்கத் தொண்டர்களைச் சந்திக்கவும் எனக்கு குதூகலமாயிருக்கிறது. உங்கள் மத்தியில் சுமார் 10 நாட்களுக்கு மேல் இருக்கும் ஒரு அரியசந்தர்ப்பம் கிடைத்ததை என்பாக்கியமாகக் கருதுகிறேன்.

இந்தியத் தொழிலாளர்களின் பெரும்பாலான ஆதரவுடன் அவர்களின்ஏகப்பிரதிநிதித்துவம்பெற்ற இந்தியதேசீய தொழிற்சங்க காங்கிரசின் வளர்ச்சிக்கு தமிழ்நாடுஎந்தவகையிலும் மற்றமாகாணங்களுக்குப்பின்வாங்கவில்லை என்பதைநான் முன்னமேயே அறிவேனாயினும் அதை இச்சுற்றுப்பிரயாணத்தின் போது நிதர்சனமாகக் கண்டேன்.

சில வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் தான் கம்யூனிஸ்டுகளின் பிடிப்பு பலம்பெற்றிருந்ததாகப் பிரஸ்தாபம். ஒருவகையில் உண்மையும்கூட. 'தட்டிக்கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்றபடி கம்யூனிஸ்டுகள் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, நமது தேசமெங்கும் தங்கள் சூட்சி வலையை வீசிக்கொண்டிருந்தார்கள்.

கம்யூனிஸ்டுகளின் தோற்றமும், அழிவும்.

சுமார் 25 வருஷங்களுக்குமுன் மாஸ்கோ கைக்கூலி... அவர்கள் இந்தியப்பாட்டாளிகளின் மேல் படை எடுக்க...

தார்கள். "உலகப்பாட்டாளி மக்களை ஒன்றுசேர்ப்போம்," "விவசாயி-தொழிலாளி ராஜ்யத்தை அமைப்போம்," "பாட்டாளி ராஜ்யத்தைப்படைப்போம்" என்ற கவர்ச்சிதரும் சுலோகங்களைக் கூவினார்கள். நடைமுறையில் சாத்தியப்படாத—பகுத்தறிவுக்குப் பொருந்தாத—கோரிக்கைகளை எல்லாம் வாங்கித்தருவதாகக் கண்ணைமூடிக்கொண்டு வாக்களித்தார்கள். தொழிலாளர்களிடையே நிலவும் அறியாமையையும், அவஸ்தைகளையும் தங்களுக்குச் சாதகமாக வைத்துக்கொண்டு அவர்களை ஏமாற்றித் தங்கள் கட்சி வலைக்குள் இழுத்துக்கொண்டிருந்தார்கள். எனக்குத் தெரியும், உண்மையில் கம்யூனிஸம் என்றால் என்ன என்று தெரிந்து, அவர்கள் கட்சியில் சேர்ந்தவர்கள் 5 சதவிகிதம்கூட இராதென்று.

அக்காலத்தில் காங்கிரஸ் மகாசபை தன் முழு பலத்தையும் அன்னிய ஏகாதிபத்தியத்தை முறியடிப்பதில் செலுத்திக்கொண்டிருந்த காரணத்தால், தொழிலாளரிடையே பிரத்யேகமான கவனம்செலுத்த சாத்தியப்படாதிருந்தது. இந்த சந்தர்ப்பத்தை கம்யூனிஸ்டுகள் உபயோகித்துக்கொண்டார்கள். ஏனெனில் அவர்களுக்குத்தான் தேசத்தின் சுதந்திரத்தைப்பற்றி கவலையில்லையே! ஆகவே தங்கள் நாசவலையில் தொழிலாளர்களைச் சிக்க வைப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

நமது சுதந்திர இயக்கத்திற்கு அவர்கள் எப்படியெல்லாம் முட்டுக்கட்டை போட்டனர் என்பதை பழைய சம்பவங்களைக் குறித்த சிறிது ஞாபகம் இருந்தால் கூட நன்குவிளங்கும். நமது தலைவர்கள் எல்லோரும் சிறையில் அடைபட்டுக்கிடந்தபோது, இக்கம்யூனிஸ்டு தோழர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் கூடிக்குலாவிக்கொண்டிருந்தார்கள். ரஷ்யா நேசதேசங்களோடு உறவுகொண்டாடும்நாள்வரை "இது ஏகாதிபத்திய யுத்தம்" என்று கூவிக்கொண்டிருந்த இவர்கள், ஒரே இரவில் தங்கள் கோஷத்தை மாற்றி "இது மக்கள் யுத்தம்" என்று வெட்கமில்லாமல் கூவ ஆரம்பித்தனர். நமது சுதந்திரபோராட்டத்தை விட்டு விலகி, ரஷ்யாதேசத்தின் கைக்கூலிகளாக நின்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். ஏகாதிபத்தியத்தை முறியடிக்கும் அந்த அரிய சந்தர்ப்பத்தில் "உற்பத்தியைப் பெருக்குங்கள், யுத்தத்திற்கு உதவுங்கள்" என்று தொழிலாளர்களைப் பலவந்தப்படுத்தியதுடன், அவர்களுடைய நியாயமான உரிமைகளையும் காற்றில்பறக்கவிட்டு தொழிலாளர்களை ஏமாற்றினர்.

உங்களுக்குத்தெரியும் யுத்தகாலத்தில்முதலாளிகள் கொள்ளை லாபம் அடித்தார்கள் என்று. தொழிலாளர்கள் தங்கள்சம்பளத்தை [illegible]த்திக்கொள்ளுவதற்கு அது அரியதொருசந்தர்ப்பம். இன்று [illegible]துக்கொண்டிருக்கும் "லாபத்தில் பங்கு" என்ற

திட்டம் அந்த காலத்தில் மட்டும் உருவாகியிருந்தால் தொழிலாளர்களுக்குக் கோடிக்கணக்கான பணம் விநியோகமாயிருக்கும். தொழில் அபிவிருத்தியும் கொள்ளை லாபமும் உச்சநிலையில் இருந்த அந்தக்காலத்தில் கம்யூனிஸ்டுதோழர்கள் "உற்பத்தியைப் பெருக்கு" என்றுகூறி, "இதுமக்கள்யுத்தம்"என்றும் பட்டுத்திரையிட்டு தொழிலாளர்களின் வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்தார்கள்.

•

தொலையட்டும். அன்றுதான் நமது சுதந்திரத்துக்கும் தொழிலாளர்களுக்கும் விரோதிகளாயிருந்தார்கள் என்று சும்மாவிட்டால், இன்றைக்கும் தங்கள் விஷமத்தை கைவிட்டார்களில்லை. இன்றைக்கும் நமக்கு விரோதிகளாயிருக்கின்றனர்.

இன்று நாம் பெற்றுள்ள இந்த அரசியல் சுதந்திரத்திற்கு எத்தனை எத்தனை இடையூறுகள் எதிர்பாராமல் வந்தன என்பதை நான் இங்கு விவரிக்கவேண்டியதில்லை. பிரிவினையால் நேர்ந்த சோக சம்பவங்கள், குட்டி சமஸ்தான தேவதைகளின் குமுறல்கள், ஹைதராபாத், காஷ்மீர் தொல்லைகள், பொருளாதார நெருக்கடி, இவற்றுக்கெல்லாம் மேலாக காந்திஜீயின் திடீர் மறைவு போன்ற எத்தனையோ கருமேகங்கள் நம்மைச்சூழ்ந்துகொண்டிருந்தன. இந்த நெருக்கடியான சமயத்தில் துரோகிகளான கம்யூனிஸ்டுகள் கொலை, கொள்ளை, தீயிடல், போன்ற அழிவு நாச வேலைகளைச் செய்து நாட்டின் உற்பத்திப்பெருக்கத்திற்கும் அமைதிக்கும் பங்கம் விளைவித்தார்கள். ஜனநாயகத்திற்கு விரோதமாக காரியங்கள் செய்தனர். சுதந்திர இந்தியாவின்வளர்ச்சியே தொழிலாளர் வளர்ச்சி என்பதற்கு முரணாக நடந்துகொண்டனர். அரசியல் கட்சி என்ற யோக்கியதைக்குக்கூட அவர்கள் லாயக்கில்லை. வெளிநாட்டு விஷமிகளுக்கு உள்நாட்டு ஏஜண்டுகளாக இருந்துகொண்டு, அன்றும் கெடுத்தார்கள்; இன்றும் கேடுவிளைவிக்கின்றனர்.

•

ஆகவே, தொழிலாளர்களே! இந்த நாசகார கும்பலின் பசப்பு வார்த்தைகளில் மயங்கி அவர்களின் பலாத்காரப்பிடிப்பிற்கு இரையாகாதவாறு ஜாக்கிரதையாயிருங்கள். அவர்கள் உங்களை நாடுவதெல்லாம் உங்களை உயர்த்துவதற்கல்ல. உங்களை ஒரு படியாக வைத்து தங்கள் கட்சியையும் தங்களுடைய செல்வாக்கையும் உயர்த்திக்கொள்ளுவதற்காகவேதான். அவர்களுடைய கைப்பொம்மையாகத் தலையாட்டிக்கொண்டிருந்த அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் இன்று இருந்த இடம் தெரியாமல் மாண்டொழிந்தது. இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரஸ்தலையெடுத்த நாள்முதல் தொழிலாளர்களிடையே கம்யூனிஸ்டுகளின் பிடிப்பு தளர்ந்து போயிற்று. தமிழ்நாட்டிலும் கம்யூனிஸ்டுகள் ஒடுங்கிடனர் என்பதை அறிய சந்தோஷப்படுகிறேன்.

சோஷியலிஸ்டுகளின் சோகநாடகம்.



கம்யூனிஸ்டுகளின் துரோகச் செயல்கள்தான் இவ்வாறு இருக்கிறது என்றால், இந்திய சோஷலிஸ்டுகளின் தொல்லைகளும் சுதந்திர இந்தியாவின் வளர்ச்சிக்கு இடையூறாயிருக்கின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கம்யூனிஸ்டுகளின் போக்கையொட்டியே இவர்களுடைய வழிகளும் அமைந்திருக்கின்றன. சுதந்திரப்போராட்ட காலத்தில் நம்முடன் தோளோடு தோளாய் நின்று போராடிய இவர்கள் இன்று நாம் பெற்றுள்ள சுதந்திரத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் விலகி நின்று தொல்லைகொடுப்பது எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. இதற்கு முன்னையெல்லாம்விட இன்றுதான் நம்மிடையே ஒற்றுமை மிகவும் அவசியமாயிருக்கிறது. இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இவர்கள் நம்மோடு ஒத்துழைக்கத் தவறியது அவர்களுடைய பெரும் தவறாகும்.

1942-ம் வருஷ இயக்கத்திற்குப் பின் நமது தலைவர்கள் நீண்டகாலமாக சிறையில் கிடந்து வெளியுலகினின்றும் விலகியிருக்க நேரிட்டது. அதன்பின் அவர்கள் வெளியே வந்து பார்த்தபோதுதான் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் மேலதிகாரம் கம்யூனிஸ்டுகளின் கைப்பொம்மையாயிருப்பதைக் கண்டார்கள். தலைவர்கள் சிறையில் கிடந்த காலத்தை அவர்கள் அவ்வளவு தூரம் தங்களுக்குச் சாதகமாக, ஜனநாயகத்துக்கு விரோதமாக எல்லாச் சூட்சிகளையும் செய்துவைத்திருந்தனர். இதை மறுபடியும் செப்பனிட தலைவர்கள் முயற்சித்தனர். பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த கம்யூனிஸ்டுகளை அதே வழிகளால் முறியடிப்பதை நம் தலைவர்கள் விரும்பவில்லை. ஆகவே, தேசிய மனப்போக்கையுடைய தொழிற்சங்கங்களையெல்லாம் ஒருங்கு சேர்த்து இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் என்னும் நமது ஸ்தாபனத்தை உருவாக்கினார்கள்.

இந்த ஸ்தாபனத்தை ஆரம்பித்த காலத்தில் சோஷியலிஸ்டுத் தலைவர்களுக்குஅழைப்பு அனுப்பப்பட்டது. ஸ்ரீ அசோக் மேத்தா, ஸ்ரீமதி அருணா அசப் அலி முதலிய சோஷியலிஸ்டு தலைவர்களும் [illegible]ரம்ப மகாநாட்டில் கலந்துகொண்டிருந்தனர். ஆனால் இந்திய [illegible] தொழிற்சங்க காங்கிரசுடன் ஒத்துழைப்பதற்குப் பதில், [illegible]வசமாக அவர்கள் ஹிந்து மஜதூர் பஞ்சாயத் என்ற ஒரு

போட்டி ஸ்தாபனத்தையும் சிருஷ்டித்துத் தொழிலாளர்களிடையே பிளவை உண்டாக்கினர்கள்.

ஹிந்து மஜ்தூர் பஞ்சாயத் என்ற ஸ்தாபனத்தை உண்டாக்கிய தலைவர்களுக்கே அதில் நம்பிக்கை இல்லை. அதன் பிரதிபலன் சில மாதங்களுக்குள்ளாகவே கிடைத்துவிட்டது. இந்திய தொழிலாளர்கள் அதற்குச் சிறிதும் ஆதரவு கொடுக்கவில்லை என்பதைக் கண்டார்கள்.

இந்த கசப்பான அனுபவத்திற்குப் பின்னுவது அவர்கள் இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரசோடு ஒத்துழைக்க முன் வந்திருக்கவேண்டும். ஆனல் தங்கள் தோல்வியின் காரணமாக அவர்கள் மேலும் ஆத்திரங்கொண்டு தேசியத்திற்கும் தொழிலாளர்களுக்கும் விரோதிகளான ராடிக்கல் டெமாக்ரேடிக் கட்சி (Redical Democratic Party) என்னும் ராயிஸ்டுகளோடு ஒப்பந்தம் செய்துகொண்டு ஹிந்து மஜ்தூர் பஞ்சாயத் என்ற பெயரைமாற்றி ஹிந்து மஜ்தூர் சபா என்று வேறு பெயர் சூட்டுவதன்மூலம் தங்கள் தோல்வியை மறைக்க முயன்றனர்.

இந்த ராயிஸ்டுகளைக் குறித்து தொழிலாளர்கள் நன்கு அறிவார்கள். நாம் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் பிரிட்டீஷ் ஏகாதிபத்தியத்திடம் மாதம் 13,000 ரூபாய் வீதம் பகிரங்கமாகக் கைக்கூலி வாங்கிக்கொண்டு தொழிலாளர்களைப் பணயமாக வைத்து அன்னியராதிக்கத்தோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தவர்கள்தான் இந்த ராயிஸ்டுகள். இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரசின் வளர்ச்சியைக் கண்டு, சோஷியலிஸ்டுகள் தங்கள் ஆத்திரத்தில் இன்னது செய்கிறோமென்று தெரியாமல் இந்த ராயிஸ்டுகளோடு சேர்ந்துகொண்டார்கள். அதன் பின் கம்யூனிஸ்டுகளின் மறு பிரதியும், இலங்கையில் தலைமைக் காரியாலயத்தையும்கொண்ட 4-வது அகிலத்தையும் சேர்த்துக்கொண்டார்கள். இதில் ஆச்சரியப்படத்தக்க விஷயம் என்னவென்றல் ஹிந்து மஜ்தூர் சபாவில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு உதிரிக் கட்சிகளும் ஒன்றுக்கொன்று அடிப்படையிலேயே முரண்பட்டவை. இவை எத்தனை காலத்திற்கு ஒன்றுபட்டிருந்து என்னத்தைச் சாதித்துவிடப்போகின்றன என்ற கேள்விக்குப் பதில் நான் சொல்லாமலே தெரிந்துகொள்ளலாம்.

இதற்கிடையில் ஹிந்து மஜ்தூர் சபாவில் இணைக்கப்பட்டுள்ள தொழிற்சங்கங்களை நேரடியாக சோஷ்யலிஸ்டுக் கட்சியோடு ஐக்கியப்படுத்திக்கொள்ள சோஷ்யலிஸ்டுத் தலைவர்கள் முயற்சிக்கின்றனர். இதைக் குறித்து சோஷ்யலிஸ்டுத் தலைவர்கள் பகிரங்கமாகவே பேசிக்கொண்டு வருகின்றனர். இதிலிருந்து சோஷியலிஸ்டுகள் தங்கள் அரசியல் ஆதிக்கத்துக்கென்று தொழிலாளர்களை நாடுகின்றனரேயன்றி தொழிற்சங்க வளர்ச்சிக்காக அல்ல என்பதைத் தெளிவாக உணரலாம். ஆகவே தொ

லாளர்கள் 'சோஷியலிஸம்' என்ற போர்வையின் கீழ் இருக்கும் சுயநலவாதிகளின் கையில் அகப்பட வேண்டாம் என்று எச்சரிக்கிறேன்.

உதிரிகள் பல

வானத்தை வில்லாக வளைத்துவிடுவோம் என்று துள்ளிக்கொண்டு, பொய் கூறுவதற்குச் சிறிதும் கூசாத, "பார்வர்டு பிளாக்" ((Forward Block) என்றபெயருடன் ஒரு கட்சி ஆர்ப்பாட்டம் செய்கிறது. இக் கட்சி நமது வீரத்தியாகி நேதாஜி சுபாஸ் போஸ் அவர்களின் புனிதமான நாமத்தைப் பந்தயமாக வைத்துக்கொண்டு, ஜாலவேடிக்கை காட்டி பிழைத்துக்கொண்டு வருகிறது. இந்தியப் பாட்டாளி மக்களைத் தட்டி எழுப்புகிறேன் என்ற பெயரில், புஸ்வாண வேடிக்கைகள் பலவற்றை அடிக்கடி வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரசின் அமோகமான வளர்ச்சியும் பலத்தையும் கண்டு பொருமை கொண்ட இந்த உதிரிக் கட்சிகள் எல்லாம் சேர்ந்துகொண்டு சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்திலும் தங்கள் விஷமத்திரையை விரித்தனர். இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரசின்மேல் இல்லாத பொல்லாத பழியைச் சுமத்தின. ஆனல் ஆழ்ந்த பரிசீலனைக்குப்பின் 60 தேசங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட இந்த ஸ்தாபனம் இக் குற்றச்சாட்டுகள் எல்லாம் நியாய விரோதமானவை என்று தள்ளுபடி செய்து இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரஸ் ஒன்றே இந்திய தொழிலாளர்களின் ஏகப் பிரதிநிதி என்று ஏற்றுக்கொண்டிருக்கிறது.

சர்வ தேச தொழிலாளர் ஸ்தாபனமும், நாமும்.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரஸ் பிரதிநிதிகள்செய்த மகத்தான சேவைகள் அனேகம். நிலக்கரிச் சுரங்கத்தொழிலாளர் சம்பந்தமான கமிட்டி, போக்குவரத்து தொழிலாளர்கள் சம்பந்தமான கமிட்டி, ஆகிய இரண்டிலும் நமது பிரதிநிதிகள் கலந்துகொண்டிருக்கின்றனர். சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் வெள்ளைத் தொழிலாளர்களைக் குறித்து அக்கரை செலுத்தப்படுவதையும், கருப்புத் தொழிலாளர்கள் உதாசீனப்படுத்தப்படுகிறார்கள் என்பதையும் நமது பிரதிநிதிகள் உணர்ந்தனர். ஆகவே இந்த ஸ்தாபனத்தின் கிளையாக ஆசிய தொழிலாளர் சம்மேளனம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று வாதாடினர்கள். இதன் காரணமாக ஜீனிவாவில் ஆசியத் தொழிலாளர் சம்மேளனத்தின் முதல் கூட்டம் கூடியது. அதில் நமது பிரதிநிதிகள் பிரதான பங்கு எடுத்துக்கொண்டனர். அதன் அடுத்த கூட்டம் அனேகமாக வருகிற ஜனவரி மாதம் இலங்கையில் கூடும் என்று எண்ணுகிறேன். இந்த சம்மேளனம் பலப்படுவதும், அதன் எதிர்கால வளர்ச்சியும் இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரசை பொருத்திருக்கிறது என்று கூறினல் அது மிகையாகாது.

புதிய உலக தொழிற் சங்க சம்மேளனம்.

இதுமட்டுமல்ல. நமது பிரதிநிதிகள் சாதித்த இன்னொரு முக்கிய காரியத்தையும் நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். உலகத் தொழிற்சங்க சம்மேளனம் என்று ஒன்று இருப்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இடைக்காலத்தில் இந்த சம்மேளனத்தில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கம் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது. ரஷ்யாவின் சூட்சிக்கு இந்த ஸ்தாபனத்தைக் கைக் கருவியாக உபயோகிக்க அவர்கள் தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொண்டிருக்கின்றனர். ஆகவே, இந்த ஸ்தாபனத்தினின்றும் பிரிந்து வேறு ஒரு புதிய உலகத் தொழிற் சங்க சம்மேளனத்தை நிறுவ ஏற்பாடுகள் நடைபெற்றன. இதற்கு ஆரம்பக் கூட்டம் ஒன்று ஜினிவாவில் நடைபெற்றது. அதிலும் நமது பிரதிநிதிகள் பிரத்தியேக அழைப்பின் பேரில் கலந்துகொண்டனர். இம் மாத இறுதியில் இப் புதிய உலகத் தொழிற்சங்க சம்மேளனத்தின் முதல் கூட்டம் லண்டனில் நடைபெறப் போகிறது. அதிலும் நமது பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள்.

தொழிலாளர்களுக்குள்ள தொல்லைகள்

இன்றைய நிலையில் உலகமெங்குமே தொழிலாளர்கள் மிகுந்த கஷ்டத்திறகுள்ளாகிவருகின்றனர். பயமுறுத்திக்கொண்டிருக்கும் ஆட்குறைப்புத்திட்டம் என்னும் முதலாளிகளின் சூட்சி, விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கும் விலைவாசிகளின் ஏற்றம் முதலிய பல பிரச்சனைகள் உலகமெங்கும் நிலவுகின்றன. நமது தேச தொழிலாளர்படும் பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல. தமிழ்நாட்டில் பிரத்தியேகமான பல குறைகள் இருக்கின்றன என்பதை நான் அறிவேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உங்களுக்குள்ள குறைகளையெல்லாம் தமிழ்நாட்டுப் பொதுக்காரியதரிசியும் எனது நெருங்கிய நண்பருமான ஸ்ரீ ஜி. ராமானுஜம் அவர்கள் விளக்கிக் கூறியுள்ளார்கள். நமது ஸ்தாபனத்தின் தமிழ் நாட்டு கிளை, அவருடைய அரிய சேவையின் காரணமாகவும், அவருடன் ஒத்துழைக்கும் தொழிற்சங்க ஊழியர்கள், தொழிலாளர்கள் நண்பர்கள் ஆகியவர்களின் கட்டுப்பாட்டின் காரணமாகவும் நன்றாக வேரூன்றி வளர்ந்துவந்திருப்பதோடு, உங்களின் சில குறைகளும் நீங்கியிருக்கிறன என்று அறிந்தேன். இன்னுமுள்ள உங்கள் குறைகள் நீங்க, நாம் எல்லோரும் ஸ்தாபன ரீதியாகக் கட்டுப்பாட்டின் பலத்தோடு ஒருவருக்கொருவர் ஒத்துழைக்க வேண்டுவது மிகவும் இன்றியமையாதது.

பஞ்சாலைத் தொழிலாளர்கள்

பஞ்சாலைத் தொழிலாளர்களைக் குறித்து போதிய அள எனக்கு நெருங்கிய தொடர்பும் அனுபவமும் உண்டு. எனெ



அவர்கள் மத்தியில் நான் பல வருஷங்கள் சேவை செய்திருக்கிறேன். நான் முதல் முதலாக தொழிற்சங்க இயக்கத்தில் நுழையும் போதே கான்பூர் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்தில்தான் ஒரு ஊழியனாகச் சேர்ந்தேன். ஆரம்பத்தில் அதன் உதவி காரியதரிசியாக நியமிக்கப்பட்டேன். அதன் பின் அதன் பொதுக்காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பின் அத்துறையில் நீண்டகால அனுபவத்திற்குப்பின் நான் அதன் தலைவராக இருந்து பல வருஷங்கள் சேவை செய்து வந்திருக்கிறேன். இன்று நான் அச் சங்கத்தின் நிர்வாகஸ்தர்களில் ஒருவனாக இல்லாவிட்டாலும் பஞ்சாலைத் தொழிலாளர்களிடையே எனக்குள்ள பிணைப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வருகிறது. பஞ்சாலை சம்பந்தமான ஒவ்வொரு நுணுக்கமான பிரச்சனைகளும் எனக்குத் தெரியும் என்று சொல்லிக்கொள்ள என்னால் முடியும்.

இன்று பஞ்சாலை முதலாளிகள் எல்லாம் "ஜவுளித் தேக்கம் அதிகரித்துவிட்டது" என்று ஒரேபல்லவியில் கூச்சலிடுவதை நாம் தினசரி கேள்விப்படுகிறோம். இவையெல்லாம் முதலாளிகளின் கட்டுப்பாடான சூட்சியாகும். ஜவுளிக் கட்டுப்பாடு எடுபடவேண்டும் என்பதற்காக முன்னொரு தடவை இம்மாதரித்தான் முதலாளிகள் கூக்குரலிட்டார்கள். இவர்கள் வார்த்தையில் நம்பிக்கை வைத்து சர்க்கார் ஜவுளி கட்டுப்பாட்டை நீக்கியது. அவ்வளவுதான். முதலாளிகள் தங்கள் விசுவ ரூபத்தை எடுத்துக்கொண்டு கட்டவிழ்த்துவிட்டவர்களைப்போல தங்கள் வாக்குறுதிகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு, அந்த சந்தர்ப்பத்தை கள்ளமார்க்கட் பணம் சம்பாதிப்பதில் தலையிட்டார்கள். ஆகவே மறுபடியும் ஜவுளிக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டுவரவேண்டிய அவசியம் சர்க்காருக்கு வந்தது.

நமது தேசத்தின் ஜவுளித் தேவையின் புள்ளிவிபரக் கணக்கை எடுத்து நோக்கினால், இன்னும் நாம் பற்றாக்குறையாகத்தான் இருக்கிறோம் என்பது தெரியவரும். நமது உள்நாட்டுத் தேவைக்குக் கூட இன்றைய உற்பத்தி போதாது. அப்படி இருக்கும்போது, ஜவுளி இவ்வாறு தேங்கிக்கிடக்கக் காரணம் என்ன?

இன்று மக்களின் பொருளாதார வலிமை மிகவும் க்ஷீணித்திருக்கிறது என்பதை நாம் ஒவ்வொருவரும் அனுபவ ரீதியாக உணருகிறோம். மக்களின் வருமானத்தில் பெரும் பாகம் உணவுக்காகச் செலவு செய்வதில் தீர்ந்து போகிறது. உடை வீட்டு வசதி போன்ற அத்தியாவசியமான வேறு தேவைக்கென்று செலவழிப்பதற்கு வருமானத்தில் மீந்திருப்பது மிகவும் சொற்பம். ஆகவே மொத்தத்தில் நமது மக்களின் "வாங்கும்சக்தி" மிகவும் குறைந்துவிட்டது. இந்த நிலைமையில் பொருள்களின் விலை குறைந்தாலொழிய எப்படி வாங்க முடியும்?

ஜவுளியின் விலையை இன்னும் எவ்வளவோ குறைக்க ஏதுவாயிருக்கிறது. இப்பொழுதுள்ள விலையில் 30 சத விகிதம் குறைக்க முடியும். அவ்வாறு குறைத்து விற்கும்போது ஜவுளி விற்பனை அதிகரிக்கும். இதை முதலாளிகள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. இன்னும் அவர்கள் யுத்த காலத்தில் கொள்ளையடித்துக்கொண்டிருந்த கொள்ளை லாபத்தை கனவு காணுகின்றனர். காலம் மாறிவிட்டது. முதலாளிகளும் தங்கள் லாபத்தின் விகிதத்தைச் சிறிது குறைத்துக்கொள்ளத் தயாராயிருக்கவேண்டும்.

தமிழ்நாட்டில் பஞ்சாலைகளில் போனஸ் பிரச்சனை தற்சமயம் முக்கியமாக இருப்பதை அறிகிறேன். நான் கான்பூர் பஞ்சாலைத் தொழிலாளர்சங்க நிர்வாகத்தில் இருந்தகாலத்தில் போனஸ் பிரச்சனை சம்பந்தமாக ஒரு நெருக்கடி ஏற்பட்டது. மில் முதலாளி போனஸ்கொடுக்க மறுத்த காரணத்தால் வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. கடைசியில் இவ்விஷயம் ஹைகோர்ட்டுக்கு வந்தது. அங்கு போனஸ் என்பது முதலாளிகளாகவே மனமுவந்து தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் "ஒரு இனும்" என்று முதலாளிகள் வாதாடினார்கள். போனஸ் என்பது இனுமமல்ல, லாபத்திற்குப் பாத்திரமான தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய ஒரு பங்காகும். அது தொழிலாளர்களின் உரிமை என்று நாங்கள் எடுத்துக் கூறினோம். கடைசியில் நமது விவாதத்தை ஹைகோர்ட் ஏற்றுக்கொண்டது. முதலாளிகள் தங்கள் பணத் திமிரின் காரணமாக அத்துடன் நிற்கவில்லை. வழக்கைபெடரல்கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். அங்கு நாங்களும் இதே விவாதத்தை எடுத்துக் கூறினோம். பெடரல் கோர்ட்டும் நமது நியாயத்தை அங்கீகரித்தது. அதற்குப் பிறகுதான் போனஸ் என்பது தொழிலாளர்களின் உரிமையான பங்கு என்று நிலைபெற்றது.

பொதுவாக பஞ்சாலைத் தொழிலில் 1947-ம் வருஷத்திய லாபத்தைக் காட்டிலும் 1948-ம் வருஷத்தில் இரண்டு மடங்கு அதிக லாபம் கிடைத்திருக்கிறது. இதை முதலாளிகளே ஒத்துக்கொண்டிருக்கின்றனர். அப்படியானல் போன வருஷ கொடுத்த போனஸைப் போல் இவ்வருஷம் இரண்டு மடங் கொடுப்பதுதான் நியாயம். பம்பாய் ஆஹமதாபாத் போல

இடங்களில் இரண்டு மடங்கு போனஸ் கொடுத்திருக்கின்றனர். அப்படியிருக்க கோயமுத்தூர், கோவில்பட்டி போன்ற இடங்களில் அதிகபோனஸ் கொடுக்க முதலாளிகள் மறுப்பதாகத் தெரிகிறது. மதுரையில் கொடுக்கப்பட்ட மூன்றே முக்கால் மாத போனஸ் கூட முழு போனசாகாது. எனினும் மதுரையில் கொடுக்கப்படும் போனஸ் விகிதப்படி தாங்களும் கொடுப்பதாக கோவில்பட்டி முதலாளிகள் ஏற்கனவே வாக்களித்திருந்தும், இப்பொழுது மறுக்கிறார்கள் என்பதைக் கேட்க வருத்தமாயிருக்கிறது. போனஸ் பிரச்னை தொழில் கோர்ட்டுக்கு வரும்போது முதலாளிகளின் நிலைமை பரிதாபமானதாகி விடும் என்பதை அவர்கள் முன்கூட்டியே உணர்ந்து நியாயமாக நடந்துகொள்ளுமாறு அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியாவில் வேறு எங்கும் கேட்டிராத வேடிக்கையான விஷயமொன்றை நான் கோவையில் கேள்விப்பட்டேன். வேலைப்பளுவை நிர்ணயிப்பதற்கென்று ஒரு கமிட்டியும், கூலியை நிர்ணயிப்பதற்கென்று இன்னொரு கமிட்டியும் சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்டன என்று கேள்விப்பட்டவுடன் என்றால் சிரிப்புத் தாங்க முடியவில்லை. வேலையும் கூலியும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவை என்ற இந்த சாதாரண விஷயத்தில்கூட சர்க்கார் தவறியது ஆச்சரியப்படத்தக்க தோன்றும். இதில் இன்னொரு விஷயம் என்னவென்றால், வேலைப்பளு நிர்ணயக் கமிட்டி தன் வேலையை முடித்து, அதன் சிபார்சுகள் அமுலுக்கு வந்து, அதன் காரணமாக ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து சுமார் இரண்டு வருஷங்களுக்கு மேலாகிறது. இன்னும் கூலி நிர்ணயக் கமிட்டியின் சிபார்சுகள் வெளிவராததைக் குறித்து வருத்தப்படுகிறேன். இது பெரியதொரு மர்மமாக இருக்கிறது. சென்னை சர்க்கார் இவ்விஷயத்தில் இன்னும் கால தாமதம் செய்யாது உடனடியாக இக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும் கோவையில் பஞ்சாலை செயலாளர் (Staff Union) சங்கத்திற்கும் முதலாளிகள் சங்கத்திற்கும் இடையில் பரஸ்பரமாகச்செய்துகொண்ட ஒப்பந்தத்தைக்கூட முதலாளிகள் அமுல் நடத்தத்தவறி வருகிறார்கள் என்பது, முதலாளிகள் புனராலோசனை செய்ய வேண்டிய விஷயம். தாங்களே மனமுவந்து செய்து கொண்ட ஒப்பந்தத்தைச் சர்க்கார் தலையீட்டின்பேரில் நிர்ப்பந்தமாக அமுல் நடத்த வேண்டிய நெருக்கடி எழுவதற்குமுன் தாங்களாகவே முன்வந்து நிறைவேற்றினால் அது எல்லோருக்கும் நன்மை பயக்கும்.

கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களிடையே நமக்கு விரோத க சோஷியலிஸ்டுகள் சிலர் பிளவை உண்டாக்கிக்கொண்டிருப் தாக அறிகிறேன். இது வெகு நாட்களுக்கு நீடிக்க முடியாது வையில் தாங்கள் அடைந்துகொண்டிருக்கும் தோல்வியை

மறைக்கும் நோக்கத்தோடு, சமீபத்தில் கோவையில் அகில இந்திய பஞ்சாலைத் தொழிலாளர் மகாநாடு ஒன்றை சோஷியலிஸ்டுகள் நடத்தினார்கள். இது ஒரு வேடிக்கையான விஷயம். மகாநாட்டின் பெயரென்னவோ பெரியதாய்த்தானிருக்கிறது. ஆனால் உண்மையில் பஞ்சாலைத் தொழிலாளர்களிடையே சோஷியலிஸ்டுகளுக்கு பிடிப்பே கிடையாது. அப்படியிருக்க யாரை வைத்துக் கொண்டு இந்த அகில இந்திய பஞ்சாலைத் தொழிலாளர் மகாநாடு?

இந்தியாவில் உள்ள பஞ்சாலைகளில் பெரும்பாலான எண்ணிக்கையைக்கொண்ட ஆமதாபாத்தில் சோஷியலிஸ்களுக்கு இடமே கிடையாது. அவர்கள் போடும் கூச்சலை தவிர அங்கு அவர்களை வரவேற்பார் யாருமில்லை. பம்பாயில் அவர்கள் ஓரளவு இடம் பெற்றிருந்த போதிலும், போன வருஷத்தில் அவர்களுடைய கணக்குபடியே பஞ்சாலைகளில் அவர்களுக்குள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை 5000. அதே சமயத்தில் நமக்கு 10,000க்கு மேற்பட்ட அங்கத்தினர்கள் இருந்தார்கள்.

தமிழ் நாட்டில் எடுத்துக்கொண்டால் கோவையில் உள்ள ஒரு சிறிது பலத்தைத்தவிர மதுரை, கோவில்பட்டி, விக்கிரமசிங்கபுரம், தூத்துகுடி முதலிய இடங்களில் அவர்களுடைய பெயரைச் சொல்வதற்குக்கூட ஆள் இல்லை. அகில இந்தியவிலும் மொத்தமாகப் பார்க்கும்போது இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரசோடு 104 பருத்தி பஞ்சாலைத் தொழிலாளர் சங்கங்களும் 69 சணல் பஞ்சாலை தொழிலாளர் சங்கங்களும் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை முறையே 2,96,000; 1,04,827 ஆகும். ஆக மொத்தத்தில் நம்மோடு சுமார் மூன்று லக்ஷம் பஞ்சாலைத் தொழிலாளர் அங்கத்தினர்கள் இணைந்திருக்கின்றனர். ஆகவே கோவையில் சோஷியலிஸ்டுகள் அகில இந்திய பஞ்சாலைத் தொழிலாளர் மகாநாட்டைக் கூட்ட என்ன அருகதை இருக்கிறது? இதிலிருந்து சோஷலிஸ்டுகள் படாடோபமான மகாநாடுகள் மூலமாகவும் மேடைப் பிரசங்கங்கள் மூலமாகவும் தங்கள் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள் என்பது விளங்குகிறது.

மதுரையை பொறுத்தவரை நமது ஸ்தாபனம் அமோகமான வரவேற்பைப் பெற்றிருக்கிறது கண்டு பெருமையடைகிறேன். இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரசோடு இணைக்கப்பட்ட சங்கங்களைத் தவிர வேறு தொழிற் சங்கங்களே மதுரையில் இல்லை என்று அறிந்தேன். விக்கிரமசிங்கபுரம் தமிழ் நாட்டில் கம்யூனிஸ்டுகளின் கோட்டையாக இருந்ததாகவும், இ. தே. தொ. ச. காங்கிரசின் பெரு முயற்சியால் அக்கோட்டை நொறுக்கப்பட்டு இன்று தொழிலாளர் கம்யூனிஸ்டு பிடியினின்றும் விடுபட்டு, தேசிய சக்தியோடு ஐக்கியபட்டு பலம் பெற்றிருக்கின்றனர் என்ற செய்தி மகிழ்ச்சிக்குரிய தொன்றாகும்.

விவசாயத் தொழிலாளர்

நமது தேசத்தின் எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் விவசாயிகள் தான் தலைமை தாங்க வேண்டும். தொழிலாளர் வளர்ச்சிக்கும் நமது கிராம சமுதாய அமைப்பிற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியின் காரணமாக சமுதாய அமைப்பு சிதைந்து, பல பிரிவினையாக சிதறுண்டு விட்டது. ஜமீன்தாரி முறை, நிலப்பிரபுத்துவம், சாதாரண நடுத்தர விவசாயி, நிலமில்லாத விவசாயக் கூலிகள் என்றிவ்வாறு கிராமப்பொருளாதாரமும் சிதறி விட்டது. ஆகவே விவசாயிகள் பல இன்னல்களுக்கு ஆளாயினர். எனவே நாம் முதலில் கிராமங்களின் சமுதாய பொருளாதார அமைப்பை மாற்றியமைக்க வேண்டியிருக்கிறது.

இது ஒரு இலகுவான காரியமல்ல. நாம் ஆலைத்தொழிலாளரிடையே பெற்ற அனுபவம் இங்கு உதவாது. ஏனெனில் போராட்ட முறை முற்றிலும் வேறு விதமாக இருக்கும். அமைதியானதும் உறுதியானதுமான வழிகளையே நாம் கையாள வேண்டும். படாடோபமாக தீவிர கோஷங்களை எழுப்புவதால் காரியம் ஆகிவிடாது. ஆலைத் தொழிலாளர்களை ஒன்று சேர்ப்பதுபோல் விவசாயிகளை ஒன்று சேர்ப்பதென்பது இலகுவான காரியமல்ல.

விவசாயத் தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியாக ஒன்று சேர்ப்பதற்கு தகுந்த தொண்டர்கள் தேவை. ஐக்கிய மாகாணத்தில் எனக்குள்ள அனுபவத்தில், விவசாயத் தொழிலாளர்களிடையே ஊழியம் செய்ய தொண்டர்கள் கிடைப்பது அரிதாயிருக்கிறது. இதே கதிதான் மற்ற மாகாணங்களிலும் இருக்கும் என்று நம்புகிறேன்.

விவசாய தொழிலாளரிடையே இன்னும் நாம் போதிய கவனம் செலுத்தவில்லை. இனியும் நாம் உதாசீனமாக இருக்க முடி[illegible]து. இப்பெரிய பிரச்னையில் நாம் இறங்கியாக வேண்டும். இந்[illegible]ல் நடந்த நமது மகாநாட்டில் இவ்விஷயம் நமது கவனத்தை

பெரிதும் கவர்ந்தது. விவசாயிகளிடையே நமது வேலையைத் தொடங்கவேண்டுமென்று எல்லா மாகாணக் கிளைகளையும் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இவ்விஷயத்தில் நமக்குள்ள கஷ்டங்களை நான் அறிவேன்.

விவசாய தொழிலாளரிடையே வேலை செய்ய விரும்பும் தொண்டர்களுக்கு நான் கூறுவது இதுதான். தீவிரவாதிகளைப் போல் நடிக்க வேண்டாம். கிராம வாசிகளோடு ஒன்றி வாழ்ந்து, பரஸ்பரம் அமைதியான வழியைத்தான் கடைபிடிக்க வேண்டும். எதற்கெடுத்தாலும் சர்க்காரின் உதவியை நாடுவது எதிர்மாறான பலனைத்தான் தரும். கிராமவாசிகளிடையே நீண்ட காலமாக நிலவி வரும் வேண்டாத பழக்க வழக்கங்களையும் அறியாமையை யும் தோசையைப் புரட்டுவதுபோல் ஒரே நாளில் அகற்றிவிட முடியாது. மத்தியஸ்த வழியே சிறந்தது. அதற்குமேல் அத்தியா வசியம் ஏற்பட்டால் மட்டுமே சர்க்கார் உதவியை நாட வேண்டும்.

1948-ல் மத்திய சட்டசபையில் குறைந்தபட்ச கூலி நிர்ண யம்பற்றி சட்டம் இயற்றியபோது, இந்திய தேசீய தொழிற்சங்க காங்கிரசின் முயற்சியால், இச் சட்டம் விவசாயத் தொழிலாளர் களுக்கும் பொருந்தும்படியாக அமைக்கப்பட்டது. இன்னும் மூன்று வருஷங்களுக்குள் விவசாயத் தொழிலாளருக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டிய ஏற்பாடுகளை சர்க்கார் செய்துகொண்டிருக்கிறது. இதன் நோக் கம் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதாகும். எப்படியேனும் நிலமில்லாத விவசாயக் கூலிகளின் வாழ்க்கைத் தரம் உடனடியாக உயர்ந்தாக வேண்டும். நேரடியாக விவசாயம் செய்யாத நிலப்பிரபுத்துவம், இடைத் தரகர் முறை முதலியவை ஒழியவேண்டும். இவற்றுக்கெல்லாம் முதல்படியாக ஜமீன்தா ரித்துவம் ஒழிய வேண்டும்.

கடைசியாக, விவசாயிகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுக்க விரும்புகிறேன். நம்மை எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் புதிய தேர்தலில் வயதுவந்த ஆண் பெண் இருபாலார்க்கும் ஓட்டுரிமை உள்ள காரணத்தால், பல அரசியல் கட்சிகள் உங்களை ஏமாற்றி ஓட்டுப் பெறும் நோக்கத்தோடு தீவிரவாதிகளைப்போல நடிக்கும். இவர்களிடம் நீங்கள் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டும். அரசியல் விவகாரங்களில் போதிய அனுபவமில்லாத நீங்கள் இவ் விஷயத்தில் முன்னெச்சரிக்கையாக நடந்து, அரசியல் துரோகி களையும், சுயநலவாதிகளையும் விட்டு விலகிக்கொள்ளக் கற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள்.

நமது தேசத்து போக்குவரத்தில் மோட்டார் தொழிலாளர்கள் முக்கிய பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் ரயில்வே தொழிலாளர்களுக்குள்ள வசதிகள் மோட்டார் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமலிருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். சில வருஷங்களுக்கு முன்புவரை ரயில்வே நிர்வாகம் தனிப்பட்ட கம்பெனிகள் ஆதிக்கத்திலிருந்தபோது, அவர்களுடைய நிலைமையும் மோசமாகத்தானிருந்தது. ரயில்வே நிர்வாகம் சர்க்காரின் கீழ் வந்தவுடன் தேசமெங்குமுள்ள ரயில்வே தொழிலாளர்களுக்கு ஒரே விதமான வசதிகள் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக மோட்டார் போக்குவரத்து பல்வேறு குட்டி நிர்வாகங்களின் ஆதிக்கத்தில் சிதறுண்டு போயிருக்கிறது. ஒவ்வொரு நிர்வாகமும் தங்கள் இஷ்டம்போல் வெவ்வேறுவிதமான விகிதத்தில் சம்பளம், பஞ்சப்படி, போனஸ் போன்றவற்றை அதிருப்திகரமான வகையில் கொடுத்துக்கொண்டு வருகின்றன. இன்னும் சில முதலாளிகள் ஸ்ரீ வெங்கடராமையா அவர்களின் சிபார்சைக்கூட அமுல் நடத்தவில்லை என்பது வருத்தப்பட வேண்டிய விஷயமாகும். அந்த சிபார்சு குறைந்தபட்ச வசதிகளையே குறிப்பிடுகிறது. அதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டியது முதலாளிகளின் கடமையாகும். அதற்குப் பதில் அந்த சிபார்சைக்கூட கொடுக்க மறுக்கிறார்கள் என்றால் அவர்கள் தண்டனைக்குள்ளாக நேரிடும்.

மோட்டார் போக்குவரத்து விரைவில் தேசீயமயமாக்கப்பட வேண்டிய அவசியத்தையே இத்தகைய முதலாளிகளின் நடத்தைகள் உறுத்திக் காட்டுவதாகத் தெரிகின்றது. ரயில்வே போக்குவரத்தைப்போல் மோட்டார் போக்குவரத்தும் தேசிய மயமாக்கப்படவேண்டும் என்பதை சர்க்கார் பூரணமாக உணர்ந்திருக்கிறது. ஆனால் அதற்குக் காலதாமதமாகலாம். ஆனால் இடைக்காலத்தில் ஊழல்கள் நிறைந்த நிர்வாகத்தின் கீழ் உள்ள போக்கு

வரத்தையேனும் சர்க்கார் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறுகின்றேன். இதற்கு உதாரணமாக தமிழ்நாட்டில் கொடைக்கானல் மோட்டார் யூனியனில் உள்ள அட்டூழியங்களையும் நிர்வாக ஊழல்களையும் என் நண்பர்கள் எடுத்துக் கூறினார்கள். அங்கு நடைபெற்றுவரும் சில தகிடுதத்தங்கள் அவசியம் கண்டிக்கத்தக்கவையாகும். அந்த நிர்வாகம் தன்னைத் திருந்திக்கொள்ளாவிடில் அதன் பலனை அது அனுபவிக்க நேரிடும். முரட்டுப் பிடிவாதமும், அநியாய முறைகளும் நீண்ட நாட்களுக்கு நீடிக்காது. கொடைக்கானல் மோட்டார் நிர்வாகம் தன் போக்கை மாற்றிக்கொள்ளவேண்டும் என்றுகேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழ் நாட்டில் சில நிர்வாகங்களின் கீழ் மோட்டார் போக்குவரத்து திருப்திகரமாக நடந்துவருகிறது என்பதைக் கேட்க சந்தோஷமாயிருக்கிறது. பொள்ளாச்சியிலுள்ள **A. B. T.**, மதுரையிலுள்ள **T. V. S.** போன்ற நிர்வாகங்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் பரஸ்பர மனோபாவம் நிலவுகிறது என்பது போற்றத்தக்கதாகும். இந்த பரஸ்பரம் இன்னும் அதிகமாக நீடிக்கவேண்டுமென்றும், நிர்வாகம் தொழிலாளர்களின் நலனை இன்னும் அதிக அக்கரையுடன் கவனிக்கவேண்டுமென்றும், அதே சமயம் தொழிலாளர்களும் தங்கள் கடமையில் தவறாமல், முன்னை விடமேலான வகையில், நடந்துகொள்ள வேண்டுமென்றும் நான் விரும்புகிறேன்.

மோட்டார் தொழிலாளர்களுக்குப் பொதுப்படையாக நான் கூறும் ஆலோசனை இது தான். இன்று நமது தேசத்தில் ஆங்காங்கே தனித்தனியாக எத்தனையோ மோட்டார் தொழிற்சங்கங்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அகில இந்திய ரீதியில் ஒரு சம்மேளனத்தின் கீழ் ஒருங்கு சேர்க்க வேண்டும். ரயில்வே தொழிலாளர்களைப்போல் நாமும் ஒன்றுபட்டு நின்றாலொழிய முதலாளித்துவ எதேச்சாதிகாரத்தை நாம் வழிக்குக்கொண்டு வர முடியாது. இதற்கு முதற்படியாக நீங்கள் தமிழ் நாட்டிலுள்ள மோட்டார்தொழிலாளர் சங்கங்களையெல்லாம் ஒரு மாகாண சம்மேளனத்தின் கீழ் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். இந்த லக்ஷியத்தை மனதிற் கொண்டு நாம் முன்னேறவேண்டும். வலிமைபொருந்திய ஸ்தாபனம் இல்லாமல் நாம் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே முதலில் நமது ஸ்தாபனத்தைப்பலப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தோட்டத்தொழிலாளர்

தொழிலாளர் சமுதாயத்தில் மிகவும் மோசமான நிலையில் இருப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள்தான். அவர்களுக்குள்ள

வாழ்க்கை வசதிகள் மிகவும் கேவலமானவை. நடமாடும் சுதந்திரம் கூட அவர்களுக்குத் தடுக்கப் பட்டு சிறையில் கிடப்பவர்களைப் போல் பல இன்னல்களுக்கு ஆளாகிவருகின்றனர்.

அதே சமயத்தில் எல்லா விதமான தொழில்களைக் காட்டிலும் அதிகப்படியான லாபம் தருவதும் தோட்டத் தொழில்தான். நமது தேசத்திலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களில் சணலைத்தவிர காப்பியும் தேயிலைதான் அதுகம். ஏறக்குறைய நமது தேசத்தின் ஏற்றுமதி மதிப்பில் 40 சதவிகிதம் டீயும் காப்பியும் தான்.

ஏற்றுமதியை அதிகரிப்பது என்பதற்கு வழிகோலுவதற்காக மத்திய சர்க்கார் ஒரு ஏற்றுமதி கமிட்டி (Export Committee ஒன்று நிறுவியிருக்கிறது. அதில் நானும் அங்கம் வகிப்பதால் இந்த விபரங்கள் எல்லாம் தெளிவாய்த் தெரியவருகின்றன. தற்சமயம் டீ, காப்பி, ஏற்றுமதி குறைந்திருக்கிறது. அதனால் ஆள் குறைப்பும் கூலி குறைப்பும் செய்யவேண்டுமென்று முதலாளிகள் கூறுவதில் உள்ள அபத்தத்தை நான் அங்கு கண்டேன். யுத்த காலத்தில் அடைந்த கொள்ளை லாபத்தைக் கனவு கண்டுகொண்டு நமது முதலாளிகள் டீயின் விலையைக் கொஞ்சம் குறைக்க விரும்பாத காரணத்தால் வெளிதேச மார்க்கட்டில் நமது டீக்கு கொஞ்சம் கிராக்கி குறைகிறது.

ஆகவே விலையைக்குறைக்கவேண்டும் என்று கமிட்டி ஏகமனதாய்த் தீமானித்தது. விலையைக்குறைப்பதற்கு முதலாளிகள் கூறும் விசித்திரமான காரணங்கள் பல. ஒருசிலர்செய்யவேண்டிய வேலையைப் பலர் செய்கிற காரணத்தால் ஆள்குறைப்புச் செய்து தொழிலாளர்களின் கூலியையும் குறைத்துவிட்டால் டீயின் விலையைக் குறைக்க ஏதுவாயிருக்கும் என்று கூறுகின்றனர்.

இந்தவிநோதமான விவாதத்தை நான் என் முழுபலங்கொண்டும் எதிர்த்தேன். ஏற்கனவே தோட்டத்தொழிலாளர்கள் கேவலமான கூலிபெறுகின்றனர். இதையும் குறைப்பதென்பது அவர்களைக்கொலை செய்வதற்குச்சமமாகும். தொழிலாளர்களின் கூலியை குறைக்கவேண்டுமென்று வாதாடும் இதே முதலாளிகள் தங்கள்

நிர்வாக மானேஜர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் ஏராளமாகச் செலவு செய்கின்றனர். தோட்டநிர்வாகத்திறகென்று அவர்கள் செய்யும்செலவு அளவுக்கு மிஞ்சியதாகும். மேலும் தங்கள் வியாபார ஏஜெண்டுகளுக்கு ஏராளமான கமிஷன் கொடுக்கின்றனர். ஆகவே இம்மாதிரியான அனுவசியச் செலவுகளை நீக்கினல் தொழிலாளர்களின் கூலியைக்குறைக்கவோ ஆட்குறைப்புச் செய்யவோ தேவையில்லை என்று நான் வாதாடினேன்.

தோட்டத்தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் கூலிவிகிதத்தைக் குறித்து வெளியுலகத்தில் அதிகமாகத் தெரியாது. தெரிந்தால் ஆச்சரியப்படுவார்கள். சாதாரணமாக ஒரு நகர சுத்தித் தொழிலாளிக்குகிடைப்பதைவிட மிகவும் கொஞ்சமாகவே கிடைக்கிறது. கூலியைக்குறைக்கவேண்டுமென்று இன்றுகூறும் முதலாளிகள் யுத்த காலத்தில் கொள்ளைலாபமடித்தபோது கூலியை உயர்த்தினார்களா என்றால் இல்லை. இன்றுகூலியைக்குறைப்பதற்கு இவர்களுக்கு என்ன அருகதையிருக்கிறது.

இப்பொழுதுள்ள கூலிவிகிதம் கொஞ்சமும் பொருத்தமானதாகாது. நியாயமான சம்பளவிகிதத்தை விட்டுவிட்டால்கூட குறைந்தபட்ச கூலி விகிதம்கூட இவர்களுக்குக் கிடைக்கவில்லை. போதுமான உணவு உடை, இருக்க வசதி செய்து கொள்ளுவதோடு, தாங்களும் தங்கள் குழந்தைகளும் படிக்க வசதி செய்யவும் போதுமான கூலி ஒவ்வொரு தொழிலாளியும் அடைந்தாகவேண்டும். இவையெல்லாம் இல்லாமல் ஒரு தொழிலாளி சுதந்திர இந்தியாவில் சுதந்திரமான பிரஜையாகத் தலைதூக்கி நடக்க முடியாது.

இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் இந்த நோக்கத்தை மனதிற்கொண்டு தன்னுலியன்றவரை பாடுபட்டுக்கொண்டு வருகிறது. சர்வதேச அரங்கத்தில் தோட்டத் தொழிலாளர் பிரச்னையை முக்கியப் படுத்திய பெருமை இ. தே. தொ. ச. காங்கிரசைச் சேர்ந்ததாகும். சர்வதேசத் தொழிலாளர் ஸ்தாபனத்தில் தோட்ட தொழிலுக்கென்று ஒரு கமிட்டியை உருவாகக நமது பிரதிநிதிகள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டனர். அடுத்த வருஷம் ஜினிவாவில் கூடப்போகும் இக் கமிட்டியில் நமது ஸ்தாபனத்தின் சார்பாக இரண்டு பிரதிநிதிகள் கலந்துகொள்ளுவார்கள். உலகமெங்குமுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரே விதமானதும் போதுமானதுமான வாழ்க்கைவசதிகளை பெறுவதே இக்கமிட்டியின் முக்கிய நோக்கமாகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நான் சில ஆலோசனைகள் கூற விரும்புகிறேன். நாம் உண்டு உறங்கி விட்டால் மட்டும் போதாது. நாம் அநேக மூட பழக்க வழக்கங்களுக்கு ஆளாகியிருக்கிறோம். நாமும் நமது பெண்களும், குழந்தைகளும் கல்வியறிவில்லாமலிருக்கிறோம். முதலில் உங்கள் குழந்தைகளேனும்

கல்வி கற்க முயற்சி செய்யுங்கள். ஓய்வு நேரங்களில் நீங்களும் படிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். உங்களுடைய சமுதாயத் துறையிலும் நீங்கள் சீர்திருந்த வேண்டும். வாழ்க்கை பண்பட வேண்டும். நம்மிடையே உள்ள அநாகரீக வழக்கங்கள் ஒழிய வேண்டும்.

உங்கள் சங்கத்தைப் பலப்படுத்தி, அதன் மூலம் வாழ்க்கை வசதிகளைப் பெறுவதுடன், வாழ்க்கையின் வேறு துறைகளிலும் சீர்திருந்த வழிவகுத்துக் கொள்ளுங்கள். கூலியை உயர்த்தினால் மட்டும் போதாது. அதைச் சரியானபடி செலவழிக்க வழி காட்டுவதும் சங்கங்களின் கடமையாயிருக்க வேண்டும்.

வால்பாரையில் உள்ள தோட்டத் தொழிலாளர்களைக்காண எனக்கு ரொம்ப சந்தோஷம். இங்குள்ள தொழிற்சங்கம் வலிமை பெற்று உயர்ந்த நோக்குடன் முன்னேறுகிறது என்று கேள்விப் படுகிறேன். மூணாரிலுள்ள தொழிலாள நண்பர்களைக் காணும் ஆசையுடனிருந்தேன். எனினும் என் உடல் நலக்குறைவின் காரணமாக அந்த அரிய சந்தர்ப்பத்தைக் கைவிட வேண்டிய தாயிற்று. இதற்காக அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

சுகாதார இலாகா சம்பந்தமான தொழிலாளர்கள்.

இங்கு ஆஸ்பத்திரி தொழிலாளர்கள், நகர சுத்தி தொழிலாளர்கள் முதலிய எல்லோரையும் குறிப்பிடுவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தொழிலாளர்களைக் குறித்து எனக்கு எற்கெனவே ஐக்கியமாகாணம் சம்பந்தப்பட்ட வரையில் பரிச்சியமுண்டு.

சில வருஷங்களுக்கு முன் கல்கத்தாவில் நாங்கள் ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கத்தை ஆரம்பித்தபோது எதிர்பாராத ஒரு எதிர்ப்பு வந்தது. ஆஸ்பத்திரி தொழில் என்பது புனிதமான தொழில். பரோபகாரத்தையும், அன்பையும் அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, இங்கு முதலாளி தொழிலாளி என்ற பிரச்சனையைக் கொண்ட தொழிறசங்கம் ஸ்தாபிப்பது பாபம் என்று மேலதிகாரிகள் எங்களுக்கு முட்டுக்கட்டை போட்டனர். அத்துடன் இந்த எதிர்ப்பை வங்காள சர்க்காரும் ஆமோதித்தது.

நாங்கள் வேறுவழியின்றி இப்பிரச்சனையை கல்கத்தா ஹைகோர்ட்டு வரை கொண்டுபோக வேண்டிய அவசியம் எற்பட்டது. புனிதமான ஆஸ்பத்திரி தொழிலைச் செய்யும் தொழிளாளர் களுக்கும் வயிறு உண்டு. அவர்களுக்கும் பொருளாதாரப் பிரச்சனைகள் இருக்கின்றன. பச்சாத்தாபமும் அன்பும் கொண்டு இத் தொழிலைச் செய்யும் இந்த ஊழியர்களுக்கு அன்பு காட்டுபவர்கள் யார்? ஒருவரையும் காணோம். பசித்த வயிருடன் கூடிய ஒருவனை அன்பு காட்டு என்பது கேலிக்குரிய தொன்ருகும். போதுமான

வாழ்க்கை வசதியில்லாத இத்தொழிலாளி எப்படித் தன் கடமையைச் சந்தோஷத்துடன் செய்ய முடியும்? ஆகவே அவர்களும் ஒன்றுபட்டு நின்றாலொழிய அவர்களை யாரும் கவனிக்கப் போவதில்லை. ஆகவே அவர்களுக்குத் தொழிற்சங்க உரிமை வேண்டும் என்று வாதாடினோம். கல்கத்தா ஹைகோர்ட்டு தொழிலாளர்களின் நியாயத்தை ஏற்று தொழிற்சங்க உரிமையுண்டு என்று தீர்ப்பளித்தது. ஆஸ்பத்திரி நிர்வாகஸ்தர்கள் அத்துடன் திருப்தியடையாமல் பெடரல் கோர்ட்டுக்குப் போனார்கள். அங்கும் இதே நியாயந்தான் நிலை நிறுத்தப்பட்டது.

ஆனால் மற்ற தொழில்களுக்கும் ஆஸ்பத்திரித் தொழிலுக்கும் வித்தியாசம் இருக்கத்தான் செய்கிறது. மற்றதொழில்களில் வேலைநிறுத்தம் செய்வதைப்போல் ஆஸ்பத்திரியிலும் வேலைநிறுத்தம் செய்வதை இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் விரும்பவில்லை. ஆஸ்பத்திரி தொழில் உயிரோடு போராடும் தொழிலாகும். இங்கு வேலைநிறுத்தம் என்றால் உயிர்ச்சேதம் செய்வதைப் போலாகும். பொதுமக்களின்—அதிலும்வியாதிஸ்தர்களின்மேல்—அதன் பலன் பிரதிபலிக்கிறது. ஆகவே வேலைநிறுத்தமின்றி பரஸ்பரம் சட்ட மூலமாகவே நமது உரிமைகளைப்பெற முயற்சிக்கவேண்டும். இதற்கான எல்லா ஒத்தாசைகளையும் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் செய்யக்காத்திருக்கிறது.

ஆஸ்பத்திரி தொழிலாளர்களையும் நகரசுத்தி தொழிலாளர்களையும் மேலதிகாரிகள் நடத்தும்முறை மிகவும் கண்டிக்கத்தக்கதாயிருப்பதை இங்கு நான் காண்கிறேன். இந்தத் தொழிலாளர்கள் ஒரு உன்னதமான சேவையைச் செய்கிறார்கள் என்பதை மேலதிகாரிகள் உணர வேண்டும். தங்களைக்காட்டிலும் உயர்ந்த வேலையைச் செய்பவர்கள் இத்தொழிலாளர்கள் என்பதை மேலதிகாரிகள் நினைத்துப்பார்த்தால் புரியும்.

ஆகவே இந்த தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயரப் பாடுவதுடன், தொழில் துறையிலும், சமுதாயத்திலும் போதிய அந்தஸ்து நிலவவும் தொழிற் சங்கங்கள் பாடுபடவேண்டும்.
இந்த சேவைக்கு இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் தன்னாலியன்ற எல்லா உதவிகளையும் செய்யும் என்று உறுதிகூறுகிறேன்.

வர்த்தகருமாஸ்தாக்கள், கடைச்சிப்பந்திகள்.

வர்த்தக குமாஸ்தாக்கள் சிப்பந்திகள் முதலியோரைப்பற்றிக் குறிப்பிடும் போது ஷாப் சட்டம் உண்மையான உற்சாகத்துடன் அமுல் நடத்தப்படவில்லை என்று தன்வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டார். ஸ்ரீசாஸ்திரியவர்கள் ஐக்கிய மாகாண சட்டசபை அங்கத்தினராயிருந்த காலத்தில் எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை உருவாக்க தான் எடுத்துக் கொண்ட சிரமங்களையெல்லாம் எடுத்துக் கூறிவிட்டு, தொழிலாளர் நன்மையை உத்தே

சித்து இயற்றப்பட்டுள்ள ஒரு சில சட்டங்களையும் சரிவர அமுல் நடத்தாதது சர்க்காரின் அக்கறையின்மையைக்காட்டுகிறதென்று குறிப்பிட்டார்.

ரயில்வே தொழிலாளர்கள்.

இன்றைய அகில இந்தியரயில்வே தொழிலாளர் சம்மேளனம் அரசியல் கட்சிகளால்இழுக்கப்பட்டுத் திண்டாடுகிறநிலைமையிலிருப்பதாக எச்சரித்துவிட்டு, நமது இந்திய தேசிய ரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தில் இன்று 1,65,000 அங்கத்தினர்கள் இருப்பதாகக் குறிப்பிட்டார். இச் சம்மேளனம் E. I. Ry ; O. T. Ry ; B. B. & C. I. Ry G. I. P. Ry., முதலிய ஐந்து பெரிய ரயில்வேக்களிலும் பலம் பெற்றிருக்கிறது என்பதைப் புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டிவிட்டு, ரயில்வேத் தொழிலாளர்கள் அரசியல் கட்சிகளைத் தங்கள் இயக்கத்திற்குள் புகுந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கைத்தறிநெசவுத் தொழிலாளர்கள்.

தமிழ் நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க கமிட்டி அங்கத்தினர்கள் ஸ்ரீசாஸ்திரி அவர்களைப் பேட்டி கண்டு மகஜர் சமர்ப்பித்த போது, நமது தேசத்தின் முக்கியமான குடிசைத் தொழிலான கைத்தறி நெசவைக் காப்பாற்ற வேண்டும் என்ற தன் ஆசையைத் தெரிவித்துக் கொண்டு, கைத்தறி நெசவுத் தொழிலை முழு நேர வேலையாக வைத்துக் கொள்ளாமல் ஒவ்வொருவரும் வேறு ஒரு உப தொழிலையும் வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், இதற்கு சர்க்கார் தங்களாலியன்ற உதவி செய்ய முன்வர வேண்டுமென்றும், தற்சமயம் வேலையில்லாதிருக்கும் கைத்தறி நெசவுத் தொழிலாளர்களை பஞ்சாலை போன்ற தொழில்களில் ஏற்படும் காலி ஸ்தானங்களில் புகுத்த வேண்டுமென்றும், கைத்தறித் துணி ஏற்றுமதிக்கு சர்க்கார் உற்சாகமளிக்க வேண்டுமென்றும், நெசவாளர்களிடையே கூட்டுறவு இயக்கம் வளர சர்க்கார் போதிய உதவி செய்ய முன்வர வேண்டு

மென்றும் கூறிவிட்டு, இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் கைத்தறி நெசவுத்தொழிலாளர்களுக்குத் தன்னுலியன்ற உதவியை யெல்லாம் செய்யத் தயாராயிருப்பதாகத் தெரிவித்துக்கொண்டார்.

ரயில்வே போர்ட்டர்கள்.

தன் தமிழ்நாடு சுற்றுப் பிரயாணத்தின் போது, ரயில்வே போர்ட்டர்கள் குதூகலமான வரவேற்பும், உதவியும் செய்ததற்காக இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரசோடு இணைந்துள்ள தென்னிந்திய ரயில்வே போர்ட்டர்கள் சம்மேளனத்தின் சார்பாக தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இந்தியாவில் இத்தகைய உருப்படியான சம்மேளனம் உருவாகியிருப்பது இதுதான் முதலாவதாகும் என்று குறிப்பிட்டார். ரயில்வே போர்ட்டர்களுக்குள்ள குறைகள் அனேகம் என்றும், அவற்றுள் சம்மேளனத்தால் நீக்க முடியாதவற்றை மேற்கொண்டு முயலதான் என்றைக்கும் சந்தோஷத்துடன் தயாராயிருப்பதாகவும் வாக்களித்தார். போர்ட்டர்கள் பொது ஜனங்களுக்கு நியாயமான எல்லா உதவிகளையும் செய்து மக்களின் அன்புக்குப் பாத்திரர்களாக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மேலும் தனக்கு வரவேற்பளித்த சினிமாத் தொழிலாளர்கள், என்ஜினீரிங் தொழிலாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், செக்குத் தொழிலாளர்கள், முனிசிபல் ரோடு தொழிலாளர்கள், பிரஸ் தொழிலாளர்கள், சிமிண்டுத் தொழிலாளர்கள் முதலிய எல்லோருக்கும் தன் வணக்கத்தையும் அன்பையும் தெரிவித்துக் கொண்டார்.

நமது ஐந்து அம்ச திட்டம்



பொதுப்படையாக இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் வகுத்துள்ள முக்கியமான திட்டங்களைக் குறித்து விளக்க விரும்புகிறேன். இத்திட்டங்கள் கொண்ட அறிக்கையை தலைவரும் நானுமாகச் சேர்ந்து ஒரு கூட்டு அறிக்கை விட்டிருக்கிறோம். அதன் சாராம்சத்தை மட்டும் இங்கு குறிப்பிடுகிறேன்.

முதலாவதாக, இன்று தொழிலாளர்களின் வாழ்க்கை வசதிக்கு நிறைய பணம் கிடைப்பதல்ல, அத்யாவசியமான

சாமான்கள் கிடைக்க வேண்டுமென்பதே முக்கியமாகும். ஆகவே அடுத்த வருஷ ஆரம்பத்திற்குள் உணவு, உடை முதலிய வாழ்க்கைக்கு மிகவும் தேவையான பொருள்களின் தற்போதைய விலையில் 33 சதவிகிதம் குறைக்க சர்க்கார் ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

இரண்டாவதாக, பொதுவாக தொழிற்சாலைகளில் ஆட் குறைப்பு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுவதற்கு தொழில் மந்தம் காரணம் என்று சொல்ல முடியாது. தொழிற்சாலையின் நிர்வாகம் ஊழல் நிறைந்ததாயிருக்குமாயின் தொழிற்சாலை க்ஷீணிக்க நேரிடுகிறது. மேலும் தங்களுக்கு வேண்டிய நபர்களைப் புகுத்திக் கொள்ளுவதன் மூலம் நிர்வாகச் செலவும் ஏராளமாக அதிகப்படுகிறது. விற்பனை ஏஜண்டுகளுக்கு சில சமயங்களில் அளவுக்கு மிஞ்சி கமிஷன் கொடுக்கின்றனர். இத்தகைய ஊழல் களின் காரணமாக தொழில் நஷ்டமடையும் போது, அதன் பழியை ஒன்றுமறியாத தொழிலாளர்களின் வாழ்க்கையில் கைவைக்கிறார்கள். கூலியைக் குறைக்க வேண்டும், ஆள் குறைப்புச் செய்ய வேண்டும் என்று கூச்சலிடுகிறார்கள். ஆகவே, இத்தகைய ஊழல் நிர்வாகத்தின் கீழுள்ள தொழிற்சாலைகளை உற்பத்திப் பெருக்கத்தின் காரணமாகவும், தொழிலாளர் நன்மை யைக் கருதியும் சர்க்காரே எடுத்து நடத்த சட்டமியற்ற வேண்டும். அல்லது தொழிலாளர்களே அதற்குத் தயாராய் இருந்தால் அவர்கள் வசம் விடவேண்டும். ஐக்கிய மாகாணத்தைப் பொருத்தவரை இவ்வாறு பல இடங்களில் நடந்திருக்கிறது.

மூன்றாவதாக, எந்த தொழிற்சாலையையும் முதலாளிகள் தங்கள் இஷ்டம் போல் கதவடைப்புச் செய்யவோ, மூடிவிடவோ கூடாது. இது உற்பத்திக்குக் குந்தகம் விளைவிப்பதுடன் தொழி லாளர்களுக்கும் இடையூறு செய்கிறது. ஆகவே தொழிற்சாலை மூட நேரிட்டால், அதற்கு முன் அதைக் குறித்து பரிசீலனை செய்ய நிபுணர் கமிட்டி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். கமிட்டி யின் சிபார்சிற்கு முதலாளிகள் உட்பட்டு நடக்கத் தகுந்தவாறு, அதிகாரம் பெற்றதாயிருக்க வேண்டும். தங்கள் லாபத்தில் சிறிது குறைந்தால் கூட தொழிற்சாலையை மூடிவிடத் திட்டமிடும் முதலாளிகளின் கெட்ட நோக்கத்தை இதன் மூலம் தடுக்க முடியும்.

நாலாவதாக, கமிட்டியின் பரிசீலனைக்குப் பின்னே அல்லது முதலாளிகளின் பிடிவாதத்தின் காரணமாகவோ, தொழிற்சாலைகளை மூட நேரிட்டால், வேலையில்லாமல் தவிக்கும் தொழிலாளர்களுக்கு மூடப்பட்டிருக்கும் காலத்திற்கு இடைக்கால நிவாரணமாக அலவன்ஸ் கொடுக்க வேண்டும். திடீரென்று வேறு வேலைகளுக்குப் போக முடியாத நிலையிலுள்ள தொழிலா ளர்களுக்கு எந்தவிதமான க்ஷேம நிதியும் இல்லாத காரணத்தால் இப் பாதுகாப்பு தொழிலாளர்களுக்கு மிகவும் அவசியம்.

கடைசியாக, தொழில் வளர வேண்டுமானல் விற்பனை அதிகரிக்க வேண்டும். விற்பனைக்கு அனுகூலமாயிருப்பது மக்களின் 'வாங்கும் சக்தி.' இன்றைய நிலைமையில் மக்களின் 'வாங்கும் சக்தி' குறைவாயிருக்கும் காரணத்தால், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விலை குறைக்கப்பட்டாலொழிய விற்பனையாகாது. இதற்கு உற்பத்திச் செலவு குறைய வேண்டும். இங்கு தொழிலாளர்களுக்குள்ள போதாத கூலி விகிதத்தில் கைவைக்காமல், நிர்வாகச் செலவைக் குறைத்தல், ஏஜன்ஸி கமிஷனைக் குறைத்தல், லாப விகிதத்தை குறைத்தல் போன்ற வழிகள் மூலம் விலையைக் குறைக்க வேண்டும்.

இந்த ஐந்து அம்சங்களடங்கிய திட்டத்தை இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் நீண்ட பரிசீலனைக்குப்பின் சர்க்காருக்கு சமர்ப்பித்திருக்கிறது. இத்திட்டம் தேசத்தின் பல பாகங்களிலும் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இத்திட்டத்தை யொட்டி கடந்த மத்திய அட்வைசரி கமிட்டி கூட்டத்தின் போது நிபுணர்கள் கமிட்டி அமைக்க வேண்டும் என்று தீர்மானமாயிற்று. மத்திய சர்க்கார் இத்திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறது. ஜவுளித் தேக்கமிருப்பதாக முதலாளிகள் போலிக் கூச்சல் எழுப்பியதன் பின் சர்க்கார் உற்றுநோக்கிப் பார்த்தபின், நமது திட்டத்தின் உண்மை அதற்குப் புலனாயிருக்கிறது.

லாபப் பங்கீடு திட்டமும், நியாயக் கூலியும்

லாபப் பங்கீட்டுத் திட்டத்தைக் குறித்த நமது அபிப்பிராயத்தையும் தொழிலாளர்கள் தெரிந்து கொள்ளவேண்டியதவசியம். லாபம் என்பது முதலும் உழைப்பும் சேர்ந்த முயற்சியின் பலனாகும். ஆகவே லாபத்தில் முதலுக்கு எத்தனை உரிமை இருக்கிறதோ அத்தனை உரிமை உழைப்புக்கும் உண்டு. இங்கு உழைப்பு என்பது கடையில் வாங்கும் சரக்கல்ல. பகுத்தறிவும் இன்ப துன்ப உணர்ச்சியும் படைத்த உயிருள்ள தொழிலாளர்களிடமிருந்துதான் அதைப் பெறமுடியும். தொழிலாளர்களைப் பட்டினி போட்டுவிட்டு உழைப்பு வேண்டுமென்றால் கிடைக்காது. உழைப்பைத் தரத்தக்க தொழிலாளி உடம்பாலும், உற்சாகத்தாலும், மூளையாலும் பலம் பெற்றவனாக இருக்கவேண்டும். அதற்கு நியாயமான கூலி கொடுப்பதன்மூலம் பெறும் உழைப்பே நியாயமான உழைப்பாகும். இல்லையேல் அது உழைப்பைச் சுரண்டுவதற்குச் சமமாகும்.

இன்றைய நிலையில் நியாயமான சம்பளத்தைக் கொடுக்காமல், உழைப்பைச் சுரண்டுவதன்மூலம் முதலாளிகள் லாபம் காட்டுகிறார்கள். இது உண்மையான லாபமாகாது. ஒரு பஞ்சாலையை எடுத்துக்கொண்டால், எப்படி பருத்திக்கு நியாயமான விலை தரவேண்டுமோ அதேபோல் உழைப்புக்கும் நியாயமானக் கூலி கொடுத்தாகவேண்டும். ஆகவே லாபத்தைக் கணக்கிடுவ

தற்குமுன் நியாயமான சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைக் கவனிக்கவேண்டும். உற்பத்தியின் சிலவைக் கணக்கிடும்போது, அதில் முதல் சிலவு நியாயமான சம்பளமாயிருக்கவேண்டும் என்று இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் லாப பங்கீடு கமிட்டிக் கூட்டத்தில் வாதாடியது. இதை முதலாளிகள் ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் கூட்டம் வெற்றி பெறுமல் யாதொரு முடிவுமில்லாமல் கலைந்துவிட்டது என்பதை வருத்தத்துடன் கூறிக்கொள்ளுகிறேன்.

மேலே கூறியபடி நியாயமான சம்பளம் என்ருல் என்ன என்பதையும் நாம் தெரிந்துகொள்ளவேண்டும். ஏதோ உண்டோம், உடம்பில் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறோம், என்ற அளவிற்கு கிடைக்கும் சம்பளம் சரியான சம்பளமல்ல. ஒரு தொழிலாளிக்கும் அவனது குடும்பத்தினருக்கும் உடல் ஆரோக்கியத்துடனும் உற்சாகத்துடனும் இருக்கத்தக்க அளவில் உணவு, உடை, இருக்க வசதி போன்றவற்றிற்குப் போதுமான சம்பளத்துடன், அவனுடைய குழந்தைகள் படிக்கவும், அவனது எதிர்காலம் நம்பிக்கையையூட்டத்தக்க சேமிப்புகளும், வைத்திய வசதி, பொழுதுபோக்கு வசதி போன்றவைகளும் தரத்தக்க அளவில் கொடுக்கப்படுவதுதான் நியாயமான சம்பளமாகும். இதையும் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் வற்புறுத்துகிறது.

தொழில் தகராறு சட்டம்

தொழிற் தகராறுகளைக் குறித்து நீங்கள் விசனப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியவந்தது. நியாயமான தொழிற் தகராறுகள்கூட கோர்ட்டுக்கு விடுவதற்கு சர்க்கார் தயங்குவதாகத் தெரிகிறது. தொழிற் கோர்ட்டு தன் தீர்ப்பை வெளியிடுவதற்கும் காலதாமதமாகிறது. வேண்டுமென்றே காலத்தை நீடிக்க முதலாளிகள் சதி செய்கின்றனர். இந்த நிலைமையில் தொழில் கோர்ட்டு தன் தீர்ப்பை வெளியிடுவதற்கு சட்டத்தில் காலவரையறை செய்வது நல்லது. சென்னையில் என்ஜினீயரிங் சம்பந்தமான ஒரு தகராறு கடந்த இரண்டரை வருட காலமாக நீடிக்கிறது என்று கேட்க ஆச்சரியப்படுகிறேன். மேலும் சென்னை சந்தன் டெக்ஸ்டைல் சம்பந்தமான சென்னை ஹைகோர்ட்டின் தீர்ப்பு தொழில் கோர்ட்டு நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிப்பதாக உணருகிறேன். இதற்கு விரைவில் விமோசனம் தேடியாக வேண்டும். இதற்குமேல், தொழில் கோர்ட்டின் தீர்ப்புகள் அமுல் நடத்தப்படாமல் கிடக்கின்றன என்ருல் தொழில் கோர்ட்டுகளை நியமிப்பதாலும் அங்கு சென்று வாதாடுவதாலும் என்ன பயன்? இதை சர்க்கார் உடனடியாகக் கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம். இல்லையேல் தொழில் துறையில் அமைதி நிலவவேண்டும் என்று சர்க்கார் வெகு நாட்களுக்கு சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

எனது வணக்கம்

தமிழ்நாட்டுச் சுற்றுப்பிரயாணத்தின்போது நான் மிகவும் குதூகலமாயிருந்தேன். தமிழ்நாட்டில் இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரஸ் காலெடுத்து வைக்கும்போது, நமக்கு உள்ளும் புறமும் பல எதிர்ப்புகள் இருந்தன. இன்று தமிழ்நாட்டுக் கிளை செய்த அரிய ஊழியத்தின் காரணமாக இங்கு இந்திய தேசீய தொழிற் சங்க காங்கிரசிற்கு அமோகமான ஆதரவு இருப்பதை நேரில் காண்கிறேன்.

எனது சுற்றுப்பிரயாணத்தின்போது, எனக்கு குதூகலமான வரவேற்பளித்த தொழிலாள சகோதர சகோதரர்களுக்கும், சக ஊழியர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமஸ்காரம்.

அனுபந்தம் 1

ஸ்ரீ ஹரிஹரநாத் சாஸ்திரி அவர்களின் சுற்றுப்பிரயாண அலுவல்களின் நிகழ்ச்சிக் குறிப்பு

20—9—49 மாலை டெல்லியைவிட்டு கிராண்டிரங்க் எக்ஸ்பிரசில் சென்னைக்கு பயணமானார். மழையின் காரணமாக ரயில் தாமதமாகி வந்ததால் 22—9—49 மாலை சென்னைக்கு வர இயலவில்லை.

23—9—49 மாலை அரக்கோணத்தில் இறங்கி புளூமவுண்டன் எக்ஸ்பிரஸில் கோயமுத்தூர் பயணமானார்.

24—9—49 காலை கோயமுத்தூர் வந்து சேர்ந்து, பஞ்சாலைத் தொழிலாளர் பிரதிநிதிகளடங்கிய சிங்காநல்லூர் கூட்டமொன்றில் கலந்துகொண்டார். அன்று மாலை கோவை பஞ்சாலை செயலாளர், ஜாபர்கள் சங்கங்கள் மகாநாட்டிலும், மதுக்கரை சிமிண்டுத் தொழிலாளர் கூட்டத்திலும், விஜயலக்ஷிமி பஞ்சாலைத்தொழிலாளர் கூட்டத்திலும், அன்று இரவு 8-மணிக்குமேல் கோயமுத்தூர் ஜில்லா பஞ்சாலைத் தொழிலாளர் பொதுக்கூட்டத்திலும், இரவு 10-மணிக்குமேல் ஸ்ரீ S.R. சந்திரன் அவர்கள் பாடசாலையில் கோயமுத்தூர் நகர ஊழியர் கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

25—9—49 வால்பாறையைச் சேர்ந்த மூடிஸில் ஆனைமலை தோட்டத் தொழிலாளர்கள் கூட்டத்திலும், எஸ்டேட் சிப்பந்திகள் மகாநாட்டிலும் கலந்துகொண்டார்.

26—9—49 காலை பொள்ளாச்சி தேசீய மோட்டார் தொழிலாளர் மகாநாட்டிலும், அன்று மாலை பழனியில் மதுரை ஜில்லா விவசாயத் தொழிலாளர் கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

27—9—49 திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த மூனூர் தோட்டத் தொழிலாளர் கூட்டத்தில் கலந்துகொள்ளப்போகும் வழியில் உடல் நிலைமை இடந்தராத காரணத்தால் அவர் அதில் கலந்துகொள்ள முடியாது போயிற்று.

28—9—49 காலை கோவில்பட்டி பஞ்சாலைத் தொழிலாளர், திருநெல்வேலி ஜில்லா மோட்டார் தொழிலாளர் கூட்டத்திலும், அன்று மாலை பாளையங்கோட்டையில் திருநெல்வேலிஜில்லாபொதுசுகாதாரதொழிலாளர்கள் கூட்டத்திலும், விக்கிரமசிங்கபுரம் பஞ்சாலைத் தொழிலாளர் மகாநாட்டிலும் கலந்துகொண்டார்.

29—9—49 தனுஷ்கோடி, ராமேஸ்வரம் போய்வந்தார்.

30—9—49 காலை மதுரையில் ரயில்வே தொழிலாளர்கள் கூட்டத்திலும் மாலையில மதுரை தேசீய பஞ்சாலைத் தொழிலாளர் சங்க ஆண்டுவிழாவிலும் கலந்துகொண்டார்.

1—10—49 காலை கொடைக்கானல் ரோடில் கொடைக்கானல் மோட்டார் தொழிலாளர் கூட்டத்திலும், அன்று மாலை, திருச்சினப்பள்ளி தொழிலாளர் கூட்டத்திலும் கலந்துகொண்டார்.

2—10—49 சென்னையில் காலையில் தொழிலாளர் பிரதிநிதிகள் கூட்டத்திலும், மாலை தொழிலாளர் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்டார். அன்று காலை சென்னை தொழில் மந்திரியவர்களைச் சந்தித்தார்.

3—10—49 காலை பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார். காலை 10-மணிக்கு கிராண்ட்ரங்க் எக்ஸ்பிரஸ் மூலம் டெல்லி பயணமானார்.

அனுபந்தம் 2

ஸ்ரீ ஹரிஹரநாத் சாஸ்திரியின் சுற்றுப்பிரயாணத்தின்போது அன்னாருக்கு வரவேற்பளித்த சங்கங்களின் விபரம்

சென்னை

1 சென்னை மாகாண பவுண்டரி ஸ்மித்தி என்ஜினீரிங் சங்கம்.
2 தீப்பெட்டித் தொழிலாளர் சங்கம்.
3 கிராம்டன் தொழிலாளர் சங்கம்.
4 கவர்மெண்டு மெடிக்கல் ஸ்டோர்ஸ் தொழிலாளர் சங்கம்.
5 P. W. D. தொழிலாளர் சங்கம்.
6 மண் எண்ணைத் தொழிலாளர் சங்கம்.
7 கவர்மெண்டு பிரஸ் தொழிலாளர் சங்கம்.

8 மெட்டல் பாக்ஸ் தொழிலாளர் சங்கம்.
9 சிம்சன் குரூப் தொழிலாளர் சங்கம்.
10 கவர்மெண்டு மோட்டார் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம்.
11 ரிச்சர்ட்சன் தொழிலாளர் சங்கம்.
12 தமிழ்நாடு சினிமா ஸ்டுடியோ தொழிலாளர் சங்கம்.

ஈரோடு

13 ரயில்வே தொழிலாளர் சங்கம்.
14 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.

கோயமுத்தூர்

15 பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்.
16 பஞ்சாலை செயலாளர் சங்கம்.
17 பஞ்சாலை ஜாபர்கள் சங்கம்
18 கோவை வர்த்தகக் குமாஸ்தாக்கள் சங்கம்.
19 கோவை ஹோட்டல் தொழிலாளர் சங்கம்.
20 ஆபரணத் தொழிலாளர் சங்கம்.
21 கோவை நகர ஊழியர்கள் சங்கம்.
22 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.
23 சிமிண்டுத் தொழிலாளர் சங்கம்.
24 மேட்டுப்பாளையம் ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.

வால்பாரை

25 ஆனைமலை தோட்டத் தொழிலாளர் சங்கம்.
26 தோட்ட நிர்வாக சிப்பந்திகள் சங்கம்.

பொள்ளாச்சி

27 தேசீய மோட்டார் தொழிலாளர் சங்கம்.

பழனி

28 மதுரை ஜில்லா விவசாயத் தொழிலாளர் சங்கம்.
29 பழனி நகரசுத்தி தொழிலாளர் சங்கம்.
30 பழனி மீன் பிடிக்கும் தொழிலாளர் சங்கம்.
31 கல்லுடைக்கும் தொழிலாளர் சங்கம்.
32 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.

திண்டுக்கல்

33 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.

கோவில்பட்டி

34 திருநெல்வேலி ஜில்லா மோட்டார் தொழிலாளர் சங்கம்.
35 பஞ்சாலை தொழிலாளர் சங்கம்.

பாளையங்கோட்டை

36 திருநெல்வேலி ஜில்லா ஆஸ்பத்திரி தொழிலாளர் [சங்கம்
37 நகரசுத்தி தொழிலாளர் சங்கம்.

38 மோட்டார் தொழிலாளர் சங்கம்.
39 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.
40 டவுன் காங்கிரஸ் கமிட்டி.

விக்கிரமசிங்கபுரம்

41 தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்.

மானமதுரை

42 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.

ராமேஸ்வரம்

43 டவுன் காங்கிரஸ் கமிட்டி.
44 தனுஷ்கோடி மதுரை சம்பெனி தொழிலாளர் சங்கம்.
45 தனுஷ்கோடி ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.

மதுரை

46 விவசாயத் தொழிலாளர் சங்கம்.
47 தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்
48 மதுரை நிட்டிங் கம்பெனி தொழிலாளர் சங்கம்.
49 ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கம்.
50 சினிமா தொழிலாளர் சங்கம்.
51 நகரசுத்தி தொழிலாளர் சங்கம்.
52 சுருட்டுத் தொழிலாளர் சங்கம்.
53 ஹோட்டல் தொழிலாளர் சங்கம்.
54 T. V. S. மோட்டார் தொழிலாளர் சங்கம்.
55 என்ஜினீரிங் தொழிலாளர் சங்கம்.
56 சலவைத் தொழிலாளர் சங்கம்.
57 செக்குத் தொழிலாளர் சங்கம்.
58 முனிசிபல் ரோட்டுத் தொழிலாளர் சங்கம்.
59 முனிசிபல் ட்ரெயினேஜ் தொழிலாளர் சங்கம்.
60 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.
61 மோட்டார் தொழிற்சாலை தொழிலாளர் சங்கம்.
62 மதுரைகொடைக்கானல்மோட்டார்தொழிலாளர்சங்கம்
63 தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கம்.

கொடை ரோடு

64 கொடைக்கானல் மோட்டார் யூனியன் தொழிலாளர் சங்கம்.
65 அம்மைநாயக்கனூர் விவசாயத் தொழிலாளர் சங்கம்.
66 பொன்மலை ரயில்வே தொழிலாளர் சங்கம்.

திருச்சினுப்பள்ளி

67 தென் சென்னை எலக்ட்ரிக் கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்கம்.
68 தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம்.
69 திருச்சி ஜில்லா மோட்டார் தொழிலாளர் சங்கம்.
70 ஆந்திரா டிரேடிங் கம்பெனி தொழிலாளர் சங்கம்.
71 முடி வெட்டும் தொழிலாளர் சங்கம்.
72 முல்டானி பாங்கர் குமாஸ்தாக்கள் சங்கம்.
73 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.

தாம்பரம்

74 ரயில்வே போர்ட்டர்கள் சங்கம்.

காந்திஜியைக் கேளுங்கள்?

முதலாளித்துவத்தைக் கண்டு நான் பயப்படவில்லை. அதை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறேன். செல்வம் ஒரே இடத்தில், சிலர் கைகளிலே குவிந்துகிடக்கக்கூடாதென்பதே நமது வழி.

முதலாளிகள் தங்கள் உழைப்பைச் சுரண்டும்வரை அனுமதித்துக்கொண்டிருக்கும் அடிமைகளல்ல தொழிலாளர்கள். அஹிம்சா முறையில் முதலாளித்வத்தை அழிக்க விரும்புகிறோம்.

உண்மையில் முதலும் உழைப்பும் ஒன்றுக்கொன்று முரணான சக்திகளல்ல. பணக்காரர்கள் தமக்கென்று அதிகப்படியாக அதிகாரம் செலுத்த விரும்புவதாலேயே அவை முரண்படுகின்றன. பணக்காரர்கள் ஏழைகளைச் சுரண்டி தங்கள் செல்வத்தை மென்மேலும் அதிகப்படுத்துவதை வெறுக்கும் காலம் விரைவில் வரும். அச்சமயம் ஏழை பணக்காரர்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வும் மடியும்.

தொழிலாளர்கள் இன்னும் தங்கள் ஸ்தாபனத்தின் கௌரவத்தையும் சக்தியையும் சரியானபடி அறிந்துகொள்ளவில்லை. முதலாளிகளைப்போல் தொழிலாளர்களும் ஒன்று திரண்டு தலை நிமிர்ந்து நிற்கப்பழகிக்கொள்ள வேண்டும்.

தொழிலன் அச்சகம், கோவை.